# அலகு 06

# இலங்கை சுதந்திரம் அடைதல்

- ➢ சோல்பரி யாப்பும் சுதந்திரம் பெறுதலும்
- ➢ சுதந்திரத்தின் பின் அபிவிருத்தி செயற்பாடுகள்
- ➢ சமூக நலன்புரி நடவடிக்கைகள்

## சோல்பரி யாப்பும் சுதந்திரம் பெறுதலும்

**1. இலங்கையின் சுதந்திரத்திற்கு வழிவகுத்த அரசியல் யாப்பு?**

❋ சோல்பரி அரசியல் யாப்பு

**2. சோல்பரி அரசியல் யாப்பின் அடிப்படையில் 1947 October இல் இடம்பெற்ற தேர்தலில் பிரதமரானவர் யார்?**

❋ D.S.சேனாநாயக்கா

❋ ஐக்கிய தேசியகட்சி

குறிப்பு :- 42 ஆசனங்களை பெற்று சுயேட்சை அங்கத்தவர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பிரதமரானார்.

**3. சோல்பரி அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்களைத் தருக.**

- ❋ ஆளுநர் நாயகம்
- ❋ பிரதமரும் அமைச்சரவையும்
- ❋ பாராளுமன்றம்
- ❋ நீதி என 4 துறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**4. ஆளுநர்நாயகம் என்ற பதவியை விளக்குக?**

❋ அதுவரை காலமும் பின்பற்றப்பட்ட ஆளுநர் பதவி நீக்கப்பட்டு ஆளுநர் நாயகம் நியமிக்கப்பட்டார். அவர் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக செயற்பட்டார். அவர் பெயரளவு நிறைவேற்று துறை அதிகாரியாக செயற்பட்டார்.

**5. இலங்கையின் முதல் 4 ஆளுநர் நாயகங்களையும் தருக.**

- ❋ ஹென்றி மங்மேசன்மூர் 1947 - 1949
- ❋ சோல்பரி 1949 - 1954
- ❋ ஒலிவர் குணதிலக 1954 - 1962
- ❋ வில்லியம் கோபல்லால் 1962 - 1972

**6. பாராளுமன்றம் என்பதை விளக்குக?**

❋ சோல்பரி அரசியல் யாப்பின் அடிப்படையில் இருசபை கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு 101 பேர் கொண்ட பிரதிநிதிகள் சபையையும் 30 பேர் கொண்ட செனட் சபையும் உருவாக்கப்பட்டது. இதன் பதவிக்காலம் 6 வருடங்கள் ஆகும்.

❋ 101 பேர் கொண்ட பிரதிநிதிகள் சபைக்கு 95 பேர் வாக்குரிமை ரீதியாகவும் 6 பேர் நியமனம் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். 30 பேர் கொண்ட செனட் சபைக்கு (மூதவை சபை) 15 பேர் பிரதிநிதிகள் சபையில் இருந்தும் 15 பேர் நியமன ரீதியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**7. பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை என்பதை விளக்குக.**

- ❊ பிரதமர் அமைச்சரவையின் தலைவராக இருப்பர்.
- ❊ பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவை பெற்றவர். ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப் படுவார்.
- ❊ நிறைவேற்று அதிகாரம் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ❊ அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகத்தால் நியமனம் செய்யபடுவார்.
- ❊ பிரதமர் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சுக்களின் பொறுப்பை வகிப்பர்.
- ❊ நீதி அமைச்சரும் மேலும் இன்னொரு அமைச்சரும் மேற்சபை (செனட் சபை)யில் இருந்து நியமனம் செய்யப்படுவார்.
- ❊ இங்கிலாந்து பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய அமைச்சரவை கூட்டம் இடம்பெறும்.
- ❊ அமைச்சரவை கூட்டாக பாராளுமன்றத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

**8. சோல்பரி முன்மொழிந்த நீதிச் செயற்பாடுகளை தருக.**

- ❋ உயர்நீதிமன்றம் உட்பட நீதிமன்றத் தொகுதியினால் நீதித்துறையின் செயற்பாடுகள் மேற்கொள்ளபடவேண்டும்.
- ❋ ஆளுநர் நாயகத்தால் பிரதம நீதிபதியும் உயர்மன்ற நீதிபதிகளும் நியமிக்கபடவேண்டும்.
- ❋ பிரதம நீதிபதியின் தலைமையில் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீதிமன்றங்களுடன் தொடர்பான நீதிபதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**9. அரசியல் கட்சி முறைமை எதன் வெற்றிக்கு முக்கியமானது?**

- ❋ பாராளுமன்ற ஜனநாயகத்தின் வெற்றிக்கு

**10. இருகட்சி முறைமை பலகட்சி முறைமையை பின்பற்றும் நாடுகளைத் தருக.**

❋

| **இருகட்சி முறை** | **பலகட்சி முறை** |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | பிரான்ஸ் |
| பிரித்தானியா | ஜேர்மனி |

**11. 1947ம் ஆண்டு தேர்தலின்போது போட்டியிட்ட கட்சிகளையும் வெற்றிபெற்ற ஆசனங்களையும் தருக?**

| | | |
|---|---|---|
| ❋ | ஐக்கியதேசிய கட்சி | 42 |
| ❋ | இலங்கா சமசமாஜக் கட்சி | 10 |
| ❋ | தமிழ் காங்கிரஸ் கட்சி | 07 |
| ❋ | இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சி | 06 |
| ❋ | போல்செவிக் லெனின் கட்சி | 05 |
| ❋ | இலங்கை கமியூனிச கட்சி | 03 |
| ❋ | தொழிலாளர் கட்சி | 01 |
| ❋ | சுயேட்சை குழு | 21 |
| | | 95 |

**12. இலங்கை சமசமாஜக் கட்சியின் தோற்றம் பற்றி விளக்குக?**

❋ பிரித்தானியாவில் கல்விகற்ற கலாநிதி N.M. பெரேரா, கலாநிதி கொல்வின், ஆர்.டீ.சில்வா திரு.பிலிப்குணவர்த்தன தலைமையில் 1935ம் ஆண்டு இலங்கை சமசமாஜக்கட்சி உருவானது. இக்கட்சியே இலங்கையில் முதன்முதல் உருவான பழமையான கட்சியாகும்.

**13. இலங்கை சமசமாஜக்கட்சி பிரிவடைந்த விதத்தை விளக்குக?**

❋ 1943ம் ஆண்டு S.A.விக்கிரமசிங்க தலைமையில் கொமியூனிசக் கட்சி, கொல்வின் ஆர்.டீ சில்வா தலைமையில் போல்செவிக் லெனினிஸ் கட்சி என இரண்டாக பிரிவடைந்தது.

**14. ஐக்கிய தேசியக்கட்சியின் தோற்றம் பற்றி விளக்குக?**

❋ 1947ம் ஆண்டு 1வது பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக D.S. சேனாநாயக்கா அவர்கள் முஸ்லீம் சங்கம், சிங்கள மகாசபை, லங்கா சேவா சங்கம் ஆகியவற்றை இணைத்து 1946 இல் ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கினர்.

**15. 1947ம் ஆண்டு 1952ம் ஆண்டு தேர்தலின் முடிவில் ஐக்கிய தேசியகட்சியின் நிலைமையினை தருக?**

❋ 1947 $\frac{42}{95}$ - சுயேட்சை குழு இணைத்து டீ.எஸ் சேனாநாயக்கா பிரதமரானார்

❋ 1952 $\frac{54}{95}$ - டட்லி சேனாநாயக்கா பிரதமரானார்

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

**16. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றம் பற்றி விளக்குக.**

❋ D.S. சேனாநாயக்கா தலைமையில் செயற்பட்ட ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து S.W.R.D பண்டாரநாயக்கா விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.

❋ 1952ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டு 9 தொகுதிகளில் வெற்றிபெற்றார்.

❋ 1956இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் போட்டியிட்டு 51 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சி யமைத்தார்.

❋ 1956 - 1959 வரை ஆட்சிசெய்து 1959 செப்டம்பர் 25ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

❋ S.W.R.D. பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவரே உலகின் முதலாவது பெண்பிரதமர் ஆவார்.

## ஏனைய அரசியல் கட்சி

**17. சுதந்திரத்துக்கு பின் செயற்பட்ட ஏனைய கட்சிகளைத் தருக?**

- தொழிலாளர் கட்சி
- தமிழ் காங்கிரஸ் கட்சி
- சமஸ்டிக் கட்சி

**18. இலங்கையில் தோற்றம்பெற்ற அரசியல் கட்சிகளையும் அதற்கு தலைமை வகித்தவர்களையும் அட்டவணைப்படுத்துக.**

| அரசியல் கட்சி | தலைவர்கள் |
|---|---|
| லங்கா சமசமாஜக் கட்சி | கலாநிதி N.M.பெரேரா,<br>கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வா. |
| பொல்செவிக் லெனினிஸ்கட்சி | பிலிப் குணவர்தன |
| கொமியூனிசக்கட்சி | S.A.விக்கிரமசிங்க |
| ஐக்கிய தேசியக்கட்சி | D.S.சேனாநாயக்கா |
| ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | S.W.R.D.பண்டாரநாயக்கா |
| தொழிலாளர் கட்சி | A.E.குணசிங்க |
| தமிழ் காங்கிரஸ் கட்சி | G.G.பொன்னம்பலம் |
| சமஸ்டிக் கட்சி | S.J.V.செல்வநாயகம் |

**19. இலங்கையின் முதலாவது பிரதமரின் மறைவை விளக்குக?**

- 1947ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் D.S.சேனாநாயக்கா தெரிவுசெய்யப்பட்டு 22.03.1952 இல் அகால மரணமடைய அவரது மகன் டட்லி சேனாநாயக்கா பிரதமரானார்.

**20. 1952 இல் இடம்பெற்ற தேர்தல் பற்றி சுருக்கமாக விளக்குக.**

❋ டட்லி சேனாநாயக்கா தனது பதவிக்காலம் முடிவடைய 04.04.1952 இல் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடாத்தி ஐக்கிய தேசியகட்சி சிறப்பானதொரு வெற்றியை பெற்று டட்லி சேனாநாயக்கா பிரதமரானார்.

**21. 1953ம் ஆண்டு டட்லி சேனாநாயக்கா பதவி விலக ஏதுவான காரணங்களை தருக.**

❋ 1953 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அரிசிவிலை அதிகரித்து அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது.

❋ அரசாங்கத்துக்கு எதிராக இடதுசாரி கட்சிகள் ஹர்த்தால் நடவடிக்கை யில் ஈடுபட்டமையால்.

❋ பாராளுமன்றத்துக்குள்ளும் அரசுக்கு எதிரான நடவடிக்கை தலை தூக்கியமையால்

**22. 1953 - 1956 களில் பிரதமராக நியமிக்கப்பட்டவர் யார்?**

❋ சேர். ஜோன் கொத்தலாவல

**23. மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்துகொண்ட கட்சிகளை தருக.**

- ❋ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - S.W.R.D. பண்டாரநாயக்க
- ❋ புரட்சிகர சமசமாஜக் கட்சி - பிலிப் குணவர்தன
- ❋ பாஷா பெரமுன - விஜயானந்தா தஹநாயக்கா
- ❋ சுயேட்சை குழு - ஐ.எம்.ஆர். ஏ.ஈரியகொல்ல

**24. 1956ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தருக.**

- ❋ மக்கள் எதிர்பார்த்த தன்னாதிக்கமும் இறைமை உடைய பூரண சுதந்திர குடியாட்சிபெற இக்கட்சி செயற்பட்டமை.
- ❋ பௌத்த பிக்குகள், தேசிய வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர் எனும் பஞ்ச மகாசக்தி இணைந்தமை.
- ❋ S.W.R.D பண்டாரநாயக்கா இடதுசாரி தலைவர்களை இணைத்து செயற்பட்டமை.

**25. 1956ஆம் ஆண்டு தேர்தலின் மூலம் பிரதமரான S.W.R.D பண்டாரநாயக்காவின் செயற்பாடுகளை தருக.**

- ❋ சிங்களத்தை அரசகரும மொழியாக அறிமுகப்படுத்தினார்.
- ❋ பிரித்தானியாவுடன் 1947 இல் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு வெளிநாட்டு விவகார ஒப்பந்தங்களை ரத்து செய்தமை.
- ❋ வல்லரசுகளின் அணிகளில் இருந்து விலகி நடுநிலைமையான வெளிநாட்டு கொள்கையொன்றை கைக்கொண்டமை.
- ❋ தேசிய மயப்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக புகையிரத, போக்கு வரத்து, பேரூந்துக்கள் அரசுரிமை ஆக்கப்பட்டமை.
- ❋ தேசிய விவசாயத்தையும், கைத்தொழிலையும் முன்னேற்ற நடவடிக்கை மேற்கொண்டமை.
- ❋ உயர்கல்வி துறையின் விருத்திக்காக வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்கள் பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்தப்பட்டமை.

**26. பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்கா மரணமான விதத்தை விளக்குக.**

❋ 1959 களில் கட்சிக்குள் ஏற்பட்ட அபிப்பிராயபேதங்களினால் 26.09.1959 இல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

# 1972 இல் குடியரசு யாப்பு

**27. முதலாவது குடியரசு யாப்பு (1972 இல்) நடைமுறைக்கு வந்தபோது பிரதமராக இருந்தவர் யார்?**

❋ திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

**28. 1ஆம் குடியரசு யாப்பு தயாரிக்கப்பட்ட விதத்தை விளக்குக.**

❋ 19.07.1970 யாப்பு சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் றோயல் கல்லூரியில் நவரங்கல மண்டபத்தில் இடம்பெற்றது. அச்சபையின் தலைவராக சமசமாஜக் கட்சியின் தலைவர் கொல்வின் R.D. சில்வா தெரிவுசெய்யப்பட்டார். இச்சபையே யாப்பைத் தயாரித்தது.

**29. 1972ஆம் ஆண்டு 1ஆம் குடியரசு யாப்பில் கூறப்பட்ட முக்கிய அம்சங்களைத் தருக.**

❋ இதுவரை லங்கா எனப்பட்ட நாடு இதன் பிறகு ஸ்ரீலங்கா எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

❋ பிரித்தானிய பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் ரீதியான தொடர்பு களை முடிவுக்கு கொண்டுவருதல்.

❋ இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்.

❋ மனித உரிமைகளை பாதுகாத்தல்.

**30. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரதான அம்சங்களைத் தருக.**

- ❋ மனித உரிமைகள்
- ❋ ஜனாதிபதி பதவி
- ❋ தேசிய அரசுப் பேரவை
- ❋ பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை
- ❋ நீதிமன்றம்

**31. 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் கூறப்பட்ட அடிப்படை அம்சங் களை தருக.**

- ❋ சட்டத்தை அனுபவித்தல்
- ❋ செயற்படுத்தல்
- ❋ பாதுகாப்பு பெறல் அனைவருக்கும் பொதுவானது
- ❋ சட்டத்தின் மூலமாக அன்றி நபர் ஒருவரின் உயிர் இழப்பிற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்கும் இடைஞ்சல் புரியக்கூடாது.
- ❋ அனைத்து குடிமக்களுக்கும் சிந்திக்கும் சுதந்திரத்திற்கும் மனச்சாட்சிப் படி நடக்கும் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு.
- ❋ குடிமக்களுக்கு அமைதியாக ஒன்றுகூடலுக்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு.

## ஜனாதிபதி

**32. ஜனாதிபதி பதவி பற்றி விளக்குக.**

❋ 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பின் அடிப்படையில் ஆளுநர் நாயகம் என்று இருந்த பதவி, 1972 இல் புதிய யாப்புடன் அப்பதவி நீக்கப்பட்டு பெயரளவு நிர்வாகியாக பிரதம மந்திரியால் ஜனாதிபதி பதவி வழுங்கப்பட்டது.

**33. இலங்கையின் இறுதி ஆளுநர்நாயகமும் முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் யார்?**

❋ வில்லியம் கோபல்லாவ்

**34. தேசிய அரசுப் பேரவையின் தோற்றம் பற்றி விளக்குக.**

❋ அதுவரை காலமும் பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது.

❋ 1972ஆம் ஆண்டு யாப்பில் தேசிய அரசு பேரவை அறிமுகப்படுத்தப் பட்டு செயற்படுத்தப்பட்டது.

**35. தேசிய அரசு பேரவையின் செயற்பாடுகளை தருக.**

- ❋ மக்கள் பிரதிநிதிகளை கொண்ட இப்பேரவை சட்டம் இயற்றும் அதிகாரம் உடையதாக இருந்தது.
- ❋ தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா சட்டமாவதற்கு சபாநாயகரின் கையொப்பம் பெறவேண்டும்.

**36. பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் தோற்றம் பற்றி விளக்குக.**

- ❋ 1947 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி நிறைவேற்று அதிகாரம் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையிடமே காணப்பட்டது. அதேபோன்று 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையிடமே காணப்பட்டது. ஆனால் சோல்பரி யாப்பின்படி பிரதமரின் சிபாரிசின் அடிப்படையில் ஆளுநர் நாயகத்தினால் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ❋ 1972ஆம் ஆண்டு யாப்பின்படி பிரதமரின் சிபாரிசின்படி ஜனாதிபதி ஏனைய அமைச்சர்களை நியமித்தார்.

**37. 1972ஆம் ஆண்டு யாப்பின்படி அறிமுகம் செய்யப்பட்ட நீதித் தொகுதியை தருக.**

- ❋ உச்ச நீதிமன்றம் (மீயுயர் நீதிமன்றம்)
- ❋ மேல் நீதிமன்றம்
- ❋ மாவட்ட நீதிமன்றம்
- ❋ மயிஸ்ரேட் நீதிமன்றம்
- ❋ அரசியல் யாப்பு நீதிமன்றம்

**38. நீதிமன்ற தொகுதியொன்று 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் ஏன் அமைக்கப்பட்டது.**

❋ 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி உரிமைகளை அனுபவிப் பதற்காக

**39. நீதிமன்ற தொகுதியில் பிரதான நிறுவனங்கள் 2 தருக.**

- ❋ உச்ச நீதிமன்றம்
- ❋ மேல் நீதிமன்றம்

**40. 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி உருவான நீதிமன்றங்களையும் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களையும் அட்டவணைப் படுத்துக.**

| நீதிமன்றங்கள் | பொறுப்புக்கள் |
|---|---|
| மாவட்ட நீதிமன்றம் | அந்தந்த மாவட்டத்தின் குடியியல் வழக்குகள் இம் மன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| மயிலஸ்ரேட் நீதிமன்றம் | குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் |
| அரசியல் யாப்பு நீதிமன்றம் | அரசியல் யாப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு உருவாக்கப்படும் யாப்புக்கள்/ சட்டமூலங்கள் யாப்புக்கு பொருத்தமானதா என்பதனை பரிசீலிக்கும் அதிகாரம் |
| தொழிலாளர் நீதிமன்றம் | தொழிலாளர்களுடைய உரிமைகள் பிரச்சினைகளை பற்றி ஆராயும் நீதிமன்றம் |

**41. நீதிமன்றங்களின் சுதந்திரத்தையும் சிறப்புரிமையையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சபை எது?**

❊ நீதிச்சேவை ஆலோசனைச் சபையும் நீதிமன்ற ஒழுக்காற்று சபையும் உருவாக்கப்பட்டன.

# 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு
# (2ஆம் குடியரசு யாப்பு)

**42. 1977ஆம் ஆண்டு தேர்தல் முடிவினை விளக்குக.**

❋ 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி $\frac{140}{168}$ ஆசனங்களை கைப்பற்றி $\frac{5}{6}$ பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. J.R ஜெயவர்த்தனா தலைவராக/ பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்.

**43. 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் முக்கிய இயல்பு களைத் தருக.**

❋ நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

❋ மக்களால் தெரிவு செய்யப்பட்ட 225 பிரதிநிதிகளை கொண்ட பாராளுமன்றம்

❋ ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நீதிபதிகளும் நீதிமன்ற தொகுதியும்

❋ விகிதாசார பிரதிநிதித்துவம்

❋ அடிப்படை உரிமைகள்

**45. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களை யும் சலுகைகளையும் தருக.**

- ❊ ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவராக இருப்பதுடன் முப்படையின் தலைவராகவும் இருப்பார்.
- ❊ பாராளுமன்றத்தை கூட்டுதல், கலைத்தல் ஆகியவற்றில் அதிகாரம் உடையவராக இருப்பார்.
- ❊ ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரமுடியாது. ஆனால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரலாம்.
- ❊ நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனையை குறைத்தல் போன்ற அதிகாரங்கள் உள்ளன.
- ❊ பிரதமரையும் மற்றும் அமைச்சர்களையும் நியமனம் செய்யும் அதிகாரம் இருந்தது.
- ❊ நாட்டில் யுத்தத்தையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தும் அதிகாரம் இருந்தது.

## பிரதமரும் அமைச்சரவையும்

**46. பிரதமரும் அமைச்சரும் நியமனம் செய்யப்பட்ட விதத்தை விளக்குக.**

1978ஆம் ஆண்டு 2ஆம் குடியரசு யாப்பின்படி பாராளுமன்ற பெரும்பான்மை அங்கத்தவர்களில் இருந்து பிரதமர் நியமிக்கப்படுவார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியே அமைச்சர்களையும் நியமிப்பார்.

**47. அமைச்சரவையின் பொறுப்புக்கள் சிலவற்றை தருக.**

- ❋ பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்படும் சட்டங்களை செயற்படுத்தல்.
- ❋ ஒவ்வொரு அமைச்சருக்கும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டை தயாரித்தல்
- ❋ அமைச்சர்களிடம் வழங்கப்பட்ட துறைகளை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தல்.

**48. 1978 ஆம் ஆண்டு பாராளுமன்ற கட்டமைப்பை விளக்குக.**

❋ பாராளுமன்றத்திற்கு 196 பேர் வாக்குரிமை ரீதியாகவும் 29 பேர் தேசிய பட்டியல் அடிப்படையிலும் பாராளுமன்ற தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுவார். அதில் முதல்தர பெரும்பாண்மை பெற்ற கட்சி ஆளும் கட்சியாகவும் இரண்டாம் தர பெரும்பாண்மை கட்சி எதிர்க்கட்சியாகவும் தெரிவு செய்யப்படும். இக்கட்சிகளுக்கு நடுநிலைமையாளராக சபாநாயகர் செயற்பட அவர் பெரும்பான்மையின் ஆதரவுடன் தெரிவு செய்யப்படுவார். அவருக்கு அருகாமையில் செங்கோலுடன் நிற்பவர் வேத்திரதாரி ஆவார். பாராளுமன்ற கருமங்களை செவ்வனே செய்பவர் பாராளுமன்ற செயலாளர் ஆவார்.

**49. பாராளுமன்ற அதிகாரங்களை தருக.**

❋ சட்டத்தை பிறப்பித்தல்

❋ நிதியை கையாளுதல்

❋ வரவு செலவு திட்டங்களை அனுமதித்தல்

❋ அபிவிருத்தி திட்டங்களை வகுத்தல்

**50. 1978ஆம் ஆண்டு யாப்பின்படி சுயாதீன நீதித்துறையின் நீதிமன்ற கட்டமைப்பைத் தருக.**

- ❊ உச்ச நீதிமன்றம் (மீயுயர் நீதிமன்றம்)
- ❊ மேல்முறையீட்டு நீதிமன்றம்
- ❊ மாவட்ட நீதிமன்றம்
- ❊ குடும்ப நீதிமன்றம்
- ❊ நீதவான் நீதிமன்றம்
- ❊ முதன்நிலை நீதிமன்றம்

**51. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் ஜனாதிபதியின் நீதித்துறை அதிகாரங்களைத் தருக.**

- ❊ உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்
- ❊ மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்
- ❊ மேல்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்
- ❊ நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்
- ❊ குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல்

**52. நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக் களையும் தருக.**

- ❋ நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு பிரதம நீதிபதி தலைமை தாங்குவார்.
- ❋ நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவர் அங்கம் வகிப்பார்.
- ❋ மேல்நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றங்களை மேற்கொள்ளும் அதிகாரம்.
- ❋ நீதித்துறை உத்தியோகத்தர்களின் பயிற்சி, பதவி உயர்வு என்பவற்றை மேற்கொள்ளல்.
- ❋ நீதிபதிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை யை மேற்கொள்ளல்.